(இது விண்ணப்பப்படிவத்துடன் இலவசமாக விநியோகிக்கப்படும்)

# குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்
# வெளிநாட்டில் இலங்கையரின் அடையாளம்

**கடவுச்சீட்டு விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**

(தயவு செய்து விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த முன்னர் சகல அறிவுறுத்தல்களையும் வாசிக்கவும்)

**(அ) விண்ணப்பப்படிவம் K – IE35 A பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்.**

(1) தாங்கள் இக்கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பது சாதாரண சேவையிலா அல்லது ஒருநாள் சேவையிலா என்பதைக் குறிப்பிடுக. (உரிய கூட்டினுள் அடையாளமிடுக.)

(2) தேவையான கடவுச்சீட்டின் வகை (உரிய கூட்டினுள் அடையாளமிடுக.)

i.சகல நாடுகளிற்கும்

ii.மத்திய கிழக்கு நாடுகள் உட்பட சில குறிப்பிட்ட நாடுகள் - இந்தியா, நேபாளம், வங்காள தேசம், பாகிஸ்தான், மாலைத் தீவு குடியரசு, ஈரான், ஈராக், லெபனான், சிரியா, ஜோர்தான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், குவைத், கட்டார், பஹ்ரேய்ன் மற்றும் யேமன்

iii. அவசரகாலச் சான்றிதழ் - இந்தியா மற்றும் நேபாளம்

iv. அடையாளச் சான்றிதழ் - சகல நாடுகளுக்கும் அல்லது குறிப்பிட்ட நாட்டுக்குச் செல்லுபடியாகக் கூடியது

(3) இறுதியாகப் பெற்றுக் கொண்ட பிரயாண ஆவணங்களின் (கடவுச்சீட்டு/ அவசரகாலச் சான்றிதழ்/ அடையாளச் சான்றிதழ்) இலக்கத்தை இங்கு எழுதவும். உள்நாட்டில் காணாமல் போயிருந்தால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது வெளிநாடு ஒன்றில் காணாமல் போயிருந்தால் இலங்கைக்கு வருவதற்காக பாவித்த தற்காலிக பிரயாண ஆவணங்களின் நிழற்பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். (முதல் முறையாக விண்ணப்பிப்போருக்கு இது ஏற்புடையதாகாது)

(4) வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகையில் இயந்திரத்தைப் பயன்படுத்தி வாசிக்க முடியாத (NMRP) கடவுச்சீட்டு பயன்படுத்தப்பட்டதெனில், குறித்த கடவுச்சீட்டின் இலக்கத்தைக் குறிப்பிடவும். குறித்த தற்காலிக கடவுச்சீட்டின் நிழற்பிரதியை இணைக்கவும்.

(5) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிடவும். 16 வயதுக்கு மேற்பட்ட சகல விண்ணப்பதாரர்களும் அடையாள அட்டையை அதன் நிழற்பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) உங்கள் முதற் பெயரை குறிப்பிடவும் (கடைசிப்பெயர்/குடும்பப் பெயர்).ஒரு கூட்டுக்குள் ஒரு எழுத்து என்ற முறையில் எழுதவும். பெயர்களுக்கிடையில் ஒரு கூட்டை வெறுமையாக விடவும். (*) விண்ணப்பதாரி திருமணத்தின் பின்னர் தமது கணவரின் பெயரை பாவித்து கடவுச் சீட்டுக்கு

விண்ணப்பிப்பாராயின் அப்பெயரை இங்கு குறிப்பிடவும். (திருமண சான்றிதழை அதன் நிழற்பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்)

(7) 6ஆம் இலக்க கூட்டினுள் எழுதப்பட்ட உங்கள் முதற் பெயர் / குடும்பப் பெயர் தவிர்த்து உங்கள் முழுப்பெயரின் மிகுதியை இங்கே எழுதவும்.

(8) இலங்கையில் உங்கள் நிரந்தர முகவரியை இங்கே எழுதவும்.

(9) பிறந்த திகதியைக் குறிப்பிடவும். (பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறு)

(10) பிறப்புச் சான்றிதழின் இலக்கத்தையும் மாவட்டத்தையும் குறிப்பிடவும். பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியும் நகல்பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(11) பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறு பியந்த இடத்தினைக் குறிப்பிடவும்.

(12) ஆண் /பெண் பால்நிலையைக் குறிப்பிடுக. (உரிய கூட்டினுள் அடையாளமிடுக)

(13) தங்களது வேலை/ தொழில்/ அந்தஸ்து அல்லது பதவியைக் குறிப்பிடுக. பெயர்களுக்கிடையில் ஒரு கூட்டை வெறுமையாக விடவும். (தொழிலை அத்தாட்சிப்படுத்துவதற்குத் தேவையான கல்விச் சான்றிதழ்/ தொழிற் சான்றிதழ்/ சேவை சான்றிதழ்களை அதன் நிழற்பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்)

(14) நீங்கள் இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றிருப்பின் குறித்த கூட்டில் அடையாளமிட்டு இரட்டைப் பிரஜாவுரிமைச் சான்றிதழின் இலக்கத்தைக் குறிப்பிடவும். (இலங்கை இரட்டைப் பிரஜாவுரிமைச் சான்றிதழை அதன் நிழற்பிரதிகளுடன் சமா்ப்பித்தல் வேண்டும்).

(15) உங்களைத் தொடர்பு கொள்ளக்கூடிய கையடக்கத் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.

(16) உங்களது மின் அஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்

(17) நீங்கள் பிரஜாவுரிமையை பெற்றுக் கொண்டுள்ள வெளிநாட்டைக் குறிப்பிடவும்

(18) நீங்கள் வெளிநாட்டு பிரஜாவுரிமையினைப் பெற்றுக்கொண்டுள்ள நாட்டின் வெளிநாட்டு கடவுச்சீட்டின் இலக்கத்தைக் குறிப்பிடவும்.

(19) விண்ணப்பதாரி 16 வயதுக்கு குறைந்தவராகக் காணப்படுகையில், குறித்த பிள்ளையின் தந்தையின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அல்லது வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கத்தையும் தாயாரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அல்லது வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கத்தை முறையே குறிப்பிடுதல் வேண்டும்.

(20) உங்களது கையொப்பத்தை 20 மற்றும் 21ஆம் இலக்க கூட்டினுள் அதன் கோடுகளின் மீது படாதவாறு இடவும்.

(21) விண்ணப்பதாரியின் பிரகடனத்தை வாசித்து கையொப்பமிடுதல் வேண்டும்.

**(ஆ) கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்**

(i) விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ்/உத்தேச வயதுச் சான்றிதழை அதன் நிழற் பிரதிகளுடன் சமர்ப்பிக்கவும். விசேட சந்தர்ப்பங்களில் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவிடத்து/ பிறப்புச் சான்றுதல் தேடுதல் சம்பந்தமான வெற்று அறிக்கையுடன் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் நிழற்பிரதியை சமர்ப்பிக்கவும்.

(ii) தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்பிரதியும்.

***முக்கியம்**

கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவம் மற்றும் ஆவணங்கள் கடவுச்சீட்டு விநியோகத்தின்போது விண்ணப்பதாரியிடம் மீண்டும் கையளிக்கப்படுவதுடன், குறித்த விண்ணப்பப்படிவத்தையும் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களையும் 10 வருட காலம் கடக்கும் வரையில் (கடவுச்சீட்டின் செல்லுபடியாகும் காலம் கடக்கும் வரை) மிகவும் பாதுகாப்பாக விண்ணப்பதாரர் தம் வசம் வைத்திருத்தல் அவசியம்.

**(இ) 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களும் வேண்டப்படும் தேவைப்பாடுகளும்**

i. விண்ணப்பப்படிவம் K – IE35 A
ii. பிறப்புச் சான்றிதழ் அதன் நிழற் பிரதி சகிதம் (ஆங்கில மொழிபெயர்ப்பானது பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியாகக் கருதப்பட மாட்டாது)
iii. பெற்றோரது கடவுச்சீட்டுக்களின் தரவுப் பக்கங்களின் நிழற் பிரதிகள் மற்றும் பிள்ளைகளின் விபரக் குறிப்புப் பக்கங்களின் (பக்கம் 8, 9) நிழற்பிரதி சகிதம் கடவுச்சீட்டுக்கள்.
iv. பெற்றோர் கடவுச்சீட்டுக்களைப் பெற்றிராவிடில், அதற்கான சத்தியப் பிரமாணக் கடிதமும் பெற்றோரது தேசிய அடையாள அட்டையும் அவற்றின் நிழற்பிரதிகளும்.
v. பிள்ளைகளுக்கு கடவுச்சீட்டு வழங்குவதற்கு பெற்றோர் இணக்கம் தெரிவிக்கும் கடிதம் (பெற்றோரில் தந்தை அல்லது தாய் அல்லது இருவரும் வெளிநாட்டில் வாழும் பட்சத்தில் அவர்களது விருப்பம் தெரிவிக்கும் கடிதங்களை குறித்த நாட்டில் அமைந்துள்ள இலங்கைக்கான தூதுவராலயம்/ உயர் ஸ்தானிகராலயத்தினால் அத்தாட்சிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.
vi. தந்தை அல்லது தாய் மரணமடைந்திருப்பின் அவர்களின் மரண சான்றிதழின் மூலப்பிரதியும் நகல் பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
vii. பெற்றோர் விவாகரத்துப் பெற்றிருப்பின், விவாகரத்து சான்றிதழ் அதன் நிழற் பிரதி சகிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
viii. பிள்ளைகளுக்கென பிறம்பான ஒரு கடவுச்சீட்டைப்

பெற்றுக்கொள்வதற்கு முன்னர், அப்பிள்ளைகள் தமது தந்தை அல்லது தாயின் செல்லுபடியாகும் கடவுச்சீட்டில் உள்வாங்கப்பட்டிருப்பின், தனியான கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் அதிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்பதுடன், இதற்காக கு.கு. 35C படிவத்தை நிரப்பி ரூ.500.00 கட்டணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (இந்தக் கட்டணமானது திருத்தங்களுக்கு உட்பட்டது)

ix. பிள்ளைகள் வெளிநாட்டில் பிறந்திருப்பார்களாயின் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இலங்கை பிரஜாவுரிமைச் சான்றிதழ் அதன் பிரதியுடன் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

x. விண்ணப்பப்படிவத்தை கையளிப்பதற்கு பெற்றோர்கள் இருவரும் வருகை தருதல் வேண்டும்.

**(ஈ) கடவுச் சீட்டுக்களை பெற்றுக்கொள்கையில் கீழே குறிப்பிடப்படும் தவறுகள் 1995ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, 1961ஆம் ஆண்டின் 68ஆம் இலக்க, 1993ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, 1998ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, 2006ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க மற்றும் 2015ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1948ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் தண்டணைக்குரிய குற்றங்களாகக் கருதப்படும்.**

- உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்
- தவறான விதத்தில் தயார் செய்யப்பட்ட போலி ஆவணங்களை சமர்ப்பித்தல்.
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டொன்றை தம்வசம் வைத்திருக்கையில் இன்னுமொரு கடவுச்சீட்டுக்காக விண்ணப்பித்தல்.
- பிறிதொருவரின் கடவுச்சீட்டை பயன்படுத்துதல்.
- பெற்றுக்கொண்ட கடவுச்சீட்டுக்களை போலியான விதத்தில் மாற்றுதல்.
- பிறிதொருவரின் ஆவணங்களை சமர்ப்பித்து கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளல்.

**(உ) கடவுச்சீட்டொன்று காணாமற்போன சந்தர்ப்பங்களில் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

- கடவுச்சீட்டு காணாமற்போனதாக பொலிஸ்நிலையத்துக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் மூலப் பிரதி
- கடவுச்சீட்டு வெளிநாட்டில் வைத்து காணாமற்போயிருப்பின், அந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த தற்காலிக பிரயாண ஆவணங்கள் (நிழற்பிரதி சகிதம்)
- கடவுச்சீட்டு கட்டணத்துக்கு மேலதிகமாக ரூ.10,000 (பத்தாயிரம் ரூபா) தண்டப்பணம் (குறித்த தண்டப் பணமானது காணாமற்போன கடவுச்சீட்டின் பத்து வருட செல்லுபடியாகும் காலம் பூர்த்திசெய்யப்படாத பட்சத்தில் மாத்திரம் அறவிடப்படும்.

(ஊ) **கட்டணங்கள்:**

| | | ஒரு நாள் சேவை | சாதாரண சேவை | 16 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு 03 வருட காலத்துக்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒரு நாள் சேவை | சாதாரண சேவை |
| ● | சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டுக்கள் | ரூ.7500.00 | ரூ. 2500.00 | ரூ. 3500.00 | ரூ. 1500.00 |
| ● | மத்திய கிழக்கு உள்ளிட்ட குறிப்பிடட நாடுகளுக்கான கடவுச்சீட்டுக்கள் | ரூ. 2500.00 | ரூ. 1000.00 | ரூ. 1500.00 | ரூ. 1000.00 |
| ● | இந்திய மற்றும் நேபாளத்துக்கான அவசர சான்றிதழ்கள் | - | ரூ. 500.00 | - | - |
| ● | சகல நாடுகளுக்குமான அவசர சான்றிதழ் (இலங்கை அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் கட்டணங்கள் அனைத்தும் திருத்தத்துக்கு உட்பட முடியும்) | ரூ. 2500.00 | - | - | - |

**(எ) பௌத்த துறவிகளுக்கான கடவுச்சீட்டு விண்ணப்பம்**

- பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டையினை நிழற் பிரதி சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
- வண.தேரர் என்பதை நிரூபிப்பதற்கான சான்றிதழ் அல்லது உபசம்பதா பெற்ற சான்றிதழை நிழற்பிரதியுடன் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

**(ஏ) விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்றல் (அரசாங்க வேலை நாட்களில்)**

ஒரு நாள் சேவை முப. 8.30 முதல் பி.ப.. 1.30 வரை

சாதாரண சேவை முப. 8.30 முதல் பி.ப.. 2.00 வரை